# இராமநாதபுரம் நகராட்சி

**இராமநாதபுரம் நகராட்சியில் 2021 ஜீன் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 30.06.2021–ந் தேதி காலை 11.41 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ), இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்**:-

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் ஜீன்–2021–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1442**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் ஜீன்–2021–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1443**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மின்வாரியத்தினாரால் புதிதாக மின் மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளது.இதனால் ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளுக்கான மின் இணைப்பு (மின் மாற்றி பொருத்தி உள்ளதால்) துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி துண்டிப்பு செய்யப்பட்ட மின் விளக்குகளுக்கு புதிதாக மீட்டர் பாக்ஸ் பொருத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.4.50 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் பணிமேற்கொள்ள நகர்மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1444**<br>**மன்ற பொருள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..4 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்-7, 26 மற்றும் 28 உள்ள சொத்துவரிவிதிப்புகள் 7073, 260301, 260302, 260303, 28199, 28200, 280202, 28195,28197, 28198 ஆகிய வரிவிதிப்புகளுக்கு உயில்சாசனம் தொடர்பாக உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டு அதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யக் கோரியுள்ள மனுக்களுக்கு இந்நகராட்சி நகர் மன்ற வழக்கறிஞர் திரு.என்.சரவணபாபு என்பவர் வழங்கப்பட்ட சட்ட கருத்துருவிற்கு கட்டணம் ரூ.24,000/- யை வழங்க மன்றப் பொருள் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** - மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1445**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..5 | இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான பாண்டிக்கண்மாய்சாமி கட்டண கழிப்பறை 01.06.2020 முதல் 31.05.2023 வரை தொகுப்பு கால முறையில் திரு.பி.எஸ்.ராமு என்பவர் ஏலம் எடுத்து 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு காலத்திற்குரிய ஏலம் முடிவடைந்து விட்டது. எனவே மேற்படி நபரால் குத்தகையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் 14.06.2021-ல் நகராட்சி வசம் பாண்டிகண்மாய்சாமி கட்டண கழிப்பறை ஒப்படைக்கப்பட்டது. எனவே மேற்கண்ட இனத்திற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும் மற்றும் தற்போது பொது ஊரடங்கு காலம் என்பதால் ஏலம் நடைபெறும் வரை துறை மூலம் வசூல் செய்யவும் மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** - 1)மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2)நிர்வாக நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏலம் கோர முன் அனுமதி பெற்று ஏலம் கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3)பொது ஊரடங்கு காலம் முடியும் வரை துறை மூலம் வசூல் செய்ய | **தீர்மானம் எண்.1446**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..6 | இராமநாதபுரம் நகராட்சியில் உங்கள் தொகுதி முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுவில் வார்டு எண்-20, சிவஞானபுரம் பகுதி சாலையில் தார் சாலை சீரமைத்து தருமாறு கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி சாலையில் தார் தளம் சீரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.70 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3)இப்பணி அவசர அவசிய பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.1415/2021/இ1 | **தீர்மானம் எண்.1447**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சி, தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்ணுரம் செயலாக்க மையம் 3 இடங்களில் இயக்கப்படுகிறது. இவற்றில் திடக்கழிவுகளை அரைக்கும் Shredding Machine அடிக்கடி பழுதாகி வருவதால் நுண்ணுரம் செயலாக்க மையத்தில், திடக்கழிவுகளை கையாளுவதில் சிரமம் ஏற்படுகின்றது. திடக்கழிவுகளைஅரைக்கும் இயந்திரத்தினை காலமுறையில் பராமரிப்பு செய்தால் தான் | **தீர்மானம் எண்.1448**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

<table>
<tr>
<td></td>
<td>இயந்திரம் தடையின்றி செயல்படும்.எனவே மேற்கண்ட மூன்று நுண்ணுரம் தயாரிக்கும் செயலாக்கம் மையத்தில் உள்ள செட்டில் மிஷினை வருடாந்திர, பராமரிப்பிற்கு 1 வருடத்திற்கு ஒப்படைத்து பராமரிக்கலாம்.அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.80 லட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியில் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> - மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1400/2021/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..8</td>
<td>இராமநாதபுரம் நகராட்சியின் கீழ் செயல்படும் இரண்டு அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள் விநியோகம் செய்வதற்கு 09.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் 16.06.2021 அன்று மூன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.
<table>
<tr><th>பொருட்கள்</th><th>திரு.என்.ஜெயகுமார் JRK காய்கறி வியாபாரம்</th><th>திருமதி.அன்பரசி ராகவன் காய்கறி வியாபாரம்</th><th>திரு.T.குமார் சாய்காய்கறி வியாபாரம்</th></tr>
<tr><td>தக்காளி</td><td>ரூ.18.00</td><td>ரூ.29.00</td><td>ரூ.26.00</td></tr>
<tr><td>உருளை கிழங்கு</td><td>ரூ.29.00</td><td>ரூ.36.00</td><td>ரூ.34.00</td></tr>
<tr><td>பல்லாரி</td><td>ரூ.38.00</td><td>ரூ.43.00</td><td>ரூ.44.00</td></tr>
<tr><td>பீன்ஸ்</td><td>ரூ.87.00</td><td>ரூ.90.00</td><td>ரூ.92.00</td></tr>
<tr><td>கேரட்</td><td>ரூ.60.00</td><td>ரூ.68.00</td><td>ரூ.66.00</td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண்.1449<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>கத்திரிக்காய்</td><td>ரூ.32.00</td><td>ரூ40.00</td><td>ரூ.37.00</td></tr>
<tr><td>மிளகாய்</td><td>ரூ.46.00</td><td>ரூ.56.00</td><td>ரூ.54.00</td></tr>
<tr><td>கருவேப்பிலை</td><td>ரூ.28.00</td><td>ரூ.31.00</td><td>ரூ.29.00</td></tr>
<tr><td>மல்லி இலை</td><td>ரூ.42.00</td><td>ரூ.43.00</td><td>ரூ.44.00</td></tr>
<tr><td>இஞ்சி</td><td>ரூ.57.00</td><td>ரூ.58.00</td><td>ரூ.59.00</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்-1ல் க திரு.என்.ஜெயக்குமார், JRK காய்கறி வியாபாரம், இராமநாதபுரம் அவர் கொடுத்டதுள்ளவிலைப்புள்ளி குறைவாக இருப்பதால் இவ்விலைப்புள்ளியை ஏற்று விநியே உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>-அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி முன் அனு பெற்று விநியோக உத்திரவு வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..9</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இராமநாதபுரம் அவர்களால் ஆய்வு கொண்டதில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Full Bore Electromagnetic Flow Meter, மற்றும் Superuantant Pump பொருத்தப்படவில்லை என்றும், அதனை உடனே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பொருத்தி, அதன் விபரத்தினைதமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியத்திற்கு</td>
<td>தீர்மானம் எண்.1450<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | தெரியப்படுத்தவும் என்று அறிவுறுத்தப்பட்டது. எனவே பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 450MM விட்டமுள்ள Flow Meter மற்றும் Supernantent Pump பொருத்தப்பட வேண்டும். எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.5,00,000/-த்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** -மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..10 | இராமநாதபுரம் நகராட்சி, அலுவலகத்தில் இயங்கி வரும் JCB வாகனம் TN65-K-4682க்கு ஒட்டுநர் பணியிடம் இல்லாததால் தனியார் ஒப்பந்தம் மூலம் கனரக ஒட்டுநர் உரிமம் பெற்ற பணியாளர் பணியமர்த்தப்பட்டு இய்க்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.A3/614/2021,நாள்.28.06.2021-ன் தேதியின்படி அனுமதிக்கப்பட்டுள்ள ஊதியம் நாளொன்றிக்கு ரூ.595/- வீதம் 01.04.2021 முதல் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் JCB வாகன ஒட்டுநர்க்கு 01.07.2021 முதல் அடுத்த மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்கள் அனுமதிக்கப்படும் விலை விகிதம் அட்டவணை வெளியிடும் வரையிலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,20,000/-த்திற்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவினத்திற்கு நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** -மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1451**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..11 | இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் மதிப்பீடுகள் தயார் செய்தல், திட்டப் பிரேரணைகள் தயார் செய்தல் மற்றும் திட்டப் பணிகள் கண்காணிப்பு மற்றும் தினசரி | **தீர்மானம் எண்.1452**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | அறிக்கைகள் அனுப்புதல் போன்ற பணிகளுக்கு போதுமான அளவில் பணியாளர்கள் இல்லாததால், மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதில் சிரமம் உள்ளது. எனவே அப்பணிகளுக்கு கூடுதலாக ஒரு தொழில்நுட்ப பணியாளரை 1 வருட காலத்திற்கு தற்காலிகமாக நியமித்துக் கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.3,10,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம் | |
| பொருள் எண்..12 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் பொருட்டு மீன் விற்பனை அங்காடி 6X4=24 சதுர மீட்டர் அளவில் அமைக்க மீன்வள உதவி இயக்குநர், மண்டபம் அவர்களின் கடிதம் ந.க.எண்.5/இ/2020, நாள் 28.12.2020-ல்கோரப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட இடத்திற்கு தற்போதைய பத்திர பதிவு துறை சார்பதிவாளர் இணையதள மதிப்பீட்டின் படி மாத வாடகை ரூ.4000/- 6X4=24 சதுர மீட்டர்க்கு நிர்ணயம் செய்து அரசாணை எண் (நிலை) எண்.285, நாள்.29.04.1985 அரசாணை எண் (நிலை) எண்,857, நாள்.21.07.1986 அரசாணை நிலை எண்.135, நாள்.13.07.1994-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இராமநாதபுரம் பாலசுப்பிரமணியன் சுவாமி கோவில் மேற்குத் தெரு வார்டு-D, பிளாக்-4, புல எண்-131, தண்ணீர் தொட்டி அருகில் 6X4=24 சதுர மீட்டர் அளவில் மீன் விற்பனை அங்காடி அமைக்க நகரமைப்பு ஆய்வாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி இடத்தில் மீன் அங்காடி அமைக்கவும் மேலும் அரசு நிறுவனமாக இருப்பதால் அதற்கு மூன்று மாத வாடகை (4,000X3=12,000) முன்பணமாக செலுத்த கோரப்பட்டுள்ளது. மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண்.1453**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>** - 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பாலசுப்பிரமணியசுவாமி கோவில் மேற்கு தெரு தண்ணீர் தொட்டிக்கு அருகில் 6X4=24 சதுர மீட்டர் அளவில் மீன் அங்காடி அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி இடத்திற்கு மாத வாடகை ரூ.4,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் முன் வைப்புத் தொகையாக மூன்று மாத வாடகை ரூ.12,000/- செலுத்தகோரியதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..13 | இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள உயர்மின் கோபுர மின்கம்பத்தில் 400W சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. தற்பொழுது சோடியம் ஆவி விளக்குகளுக்கான உதிரி பாகங்கள் மார்கெட்டில் கிடைக்காததாலும் மின் கட்டண சேமிப்பு (Energy Saving) அடிப்படையில் மேற்படி உயர்மின் கோபுர விளக்கில் 200w LED விளக்குகள் மாற்றியமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.3,85,000/-த்திற்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** - மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1454**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |
| பொருள் எண்..14 | இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் மேற்கூரை பூச்சு (Ceiling Plastrey) ஆங்காங்கே உடைந்து போய் உள்ளது.பயணிகள் வந்து செல்லும் போது பெரும் அச்சுருத்தலாகி உள்ளது. மேலும் 29.06.2021-ம்தேதி அன்று புதிய பேருந்து நிலையத்தினால் வடபுறம் சிறிய அளவில் பூச்சு பெயர்ந்து கீழே விழுந்ததில், பத்திரிக்கை செய்தியாகி மாவட்ட ஆட்சியர் அவர்களால், எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரமும் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் புதிய பேருந்து நிலைய பகுதி முழுவதும் ஆய்வு செய்யப்பட்டதில், அது | **தீர்மானம் எண்.1455**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

<table>
<tr><td></td><td>போன்று பல இடங்களில் பூச்சுப் பகுதியுடன், மராமரத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அவசர அவசியம் முன்னிட்டு புதிய பேருந்து நிலையத்தில் மராமரத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.80 லட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> - மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..15</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2021-22,புதிய பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் உள்ள பொது கழிப்பறை மராமரத்து செய்யும் பணிக்கு 29.06.2021-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ.)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல் /குறைவு (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.கே.சத்தியநாதன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>4,00,000/-</td><td>0.10%சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>4,00,000/-</td><td>0.10%சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.கே.சத்தியநாதன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மானம் எண்.1456<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு -</u> மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..16</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2021-22, நகராட்சிக்கு சொந்தமான பட்டிணம்காத்தான் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் Centralized Processing Unit Shed-ல் மின் இணைப்பு மற்றும் சீரமைப்பு மற்றும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் பணிக்கு 29.06.2021-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ.)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல் /குறைவு (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.ஆர்.நாகராஜன்,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்-21, திருவள்ளுவர் தெரு,<br>கேணிக்கரை,இராமநாதபுரம்.</td><td>7,40,000/-</td><td>1.10%சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.உடையத்தேவன், ஒப்பந்ததாரர்,<br>எண்-1/186, ஆண்டித்தேவன் வலசை,<br>தெற்கு தரவை<br>போஸ்ட்,இராமநாதபுரம்.</td><td>7,40,000/-</td><td>0.10%சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு.</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.A.உடையத்தேவன்,ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு -</u> மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்.1457<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்..17 | இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2021-22, நகராட்சிக்கு சொந்தமான பட்டிணம்காத்தான் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் வடக்குபுறம் காம்பவுண்ட் சுவர் அமைக்கும் பணிக்கு 29.06.2021-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. | **தீர்மானம் எண்.1458**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல் /குறைவு (ரூ.) |
|---|---|---|---|
| 1. | திரு.A.உடையத்தேவன்,ஒப்பந்ததாரர், எண்-1/186, ஆண்டித்தேவன் வலசை, தெற்கு தரவை போஸ்ட், இராமநாதபுரம். | 9,00,000/- | 0.10%சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.ஆர்.நாகராஜன், ஒப்பந்ததாரர், எண்-21, திருவள்ளுவர் தெரு, கேணிக்கரை, இராமநாதபுரம். | 9,00,000/- | 1.10%சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.A.உடையத்தேவன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பொருள் எண்..18 | இராமநாதபுரம் நகராட்சி அவரச அவசியம் கருதி, சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சிகளின் சட்ட விதி 15-ன் கீழ் 01.06.2021 முதல் 30.06.2021 வரையிலான கீழ்க்கண்டவாறாக உள்ள மேற்கொள்ளப்பட்ட செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், | **தீர்மானம் எண்.1459**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

<table>
<tr>
<td></td>
<td>
பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1)</td><td>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பிரதான கழிவுநீர் சுத்திகரிப்பு (STP) நிலையத்தில் உள்ள பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ள மின்மோட்டார்களை பழுதுநீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கும் பணிமுடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே</td><td>ரூ.60,370/-</td></tr>
<tr><td>2)</td><td>இராமநாதபுரம் நகராட்சி, பட்டிணம்காத்தான் பகுதியில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் இயங்கி வரும் 63KVA ஜெனரேட்டர் பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே</td><td>ரூ.57,719/-</td></tr>
<tr><td>3)</td><td>இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு TN65-AF-4353 வாகனத்திற்கு பழுது நீக்கம் பணி அகற்றி இயக்கி கொடுக்கும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே</td><td>ரூ.9,375/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>-தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920, விதி எண்-15ன் கீழ் மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு மற்றும் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..19</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான சாலையோரங்களில் வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.05.2021-ல் முடிவடைந்தது.மேற்படி 2021-2022ம் ஆண்டுக்கு குத்தகை</td>
<td>தீர்மானம் எண்.1460<br>அலுவலகக் குறிப்புகள்</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | இனத்தை புதுபிக்க கோரி திரு.கே.ராமர் என்பவருக்கு அறிவிப்பு 04.05.2021-ல் அனுப்பப்பட்டு மேற்படியான ஆண்டிற்குரிய குத்தகை இனத்தை புதுப்பிக்காமல் இருந்து வந்தார் தற்போது ஊரடங்கில் சில தளர்வுகளை அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதால் 01.07.2021 முதல் புதுப்பிக்க கோரியுள்ளார். எனவே மேற்படி விண்ணபத்தின் அடிப்படையில் 01.07.2021முதல் 31.03.2022 வரையிலான காலங்களுக்கு புதுப்பித்து உத்திரவு வழங்கவும் மேற்படியான காலங்களுக்குரிய கேட்பினை கணிணியில் பதிவேற்றம் செய்யவும் மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படியான இனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 01.07.2021 முதல் புதுப்பித்து உரிமம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | ஏற்பு. |

தனி அலுவலர் மற்றும்
நகராட்சி ஆணையர்(பொ)
இராமநாதபுரம் நகராட்சி